பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 05 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சோழர் கால செப்புப் பட்டயங்கள் இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் விலைமதிப்பற்ற சான்றுகள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** “ஒரே நாடு - ஒரே தேர்தல்” மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக் குழு, பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அரசியல் கட்சிகளின் கருத்துகளை கேட்டு வருகிறது.

**3.** அஇஅதிமுக சட்டமன்ற கட்சிக் கொறடா தொடர்பாக உரிய நேரத்தில் உரிய முடிவெடுக்கப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. **J.C.D.** பிரபாகர் கூறியுள்ளார்.

**4.** மின்துறையை சீரமைக்க வேண்டியது அவசியம் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி **29** ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நெதர்லாந்தில் இருந்து **11**-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால செப்பேடுகள் மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட இருப்பது அனைத்து இந்தியர்களுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான தருணம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தில் அரசுமுறைப்பயணம் மேற்கொண்டுள்ள திரு மோடி, அந்நாட்டின் பிரதமர் திரு. **Rob Jetten** இணைந்து செப்புப் பட்டயங்கள் இந்தியாவிற்கு ஒப்படைக்கப்படும் நிகழ்வை பார்வையிட்டார்.

இந்த செப்புப் பட்டயங்கள் இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் விலைமதிப்பற்ற சான்றுகள் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த சோழர் கால செப்பேடுகள் **21** பெரிய மற்றும் **3** சிறிய தகடுகளின் தொகுப்பாகும்.

இவற்றில் பெரும்பாலான எழுத்துக்கள் உலகின் மிகவும் அழகான மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன என்று சமூக வலைதளத்தில் திரு. மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

மாமன்னர் முதலாம் ராஜேந்திர சோழன், தனது தந்தை முதலாம் ராஜராஜனால் வாய்மொழியாக அளிக்கப்பட்ட வாக்குறுதியை முறைப்படுத்தியதை இந்த செப்பேடுகள் குறிக்கின்றன.

சோழர்களின் கலாச்சாரம் மற்றும் கடற்படைத் திறமையால் இந்தியர்களாகிய நாம் மிகுந்த பெருமை கொள்கிறோம் என்று தெரிவித்துள்ள பிரதமர், இந்த செப்பேடுகளை 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இருந்து பாதுகாத்து வந்த லெய்டன் பல்கலைக்கழகத்திற்கும், நெதர்லாந்து அரசுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிலையில் ஆணைமங்கலம் சோழர் செப்பேடுகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று திமுக கூறியுள்ளது.

இது நமது பண்பாட்டின் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வரலாற்றுப் பயணத்தில் வரவேற்புக்குரிய முன்னேற்றம் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இந்த அரிய செப்பேடுகள், வெறும் தொல்பொருள் சின்னங்கள் அல்ல, தமிழர்களின் மகத்தான வரலாறு, பண்பாடு மற்றும் சோழப் பேரரசின் பெருமைகளை பதிவு செய்துள்ள நிரந்தர சான்றுகள் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

“ஒரே நாடு - ஒரே தேர்தல்” மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக் குழு, பெங்களூருவில் நேற்று அரசியல் கட்சிகள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் விரிவான ஆலோசனை நடத்தியது.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய குழுவின் தலைவர் திரு. **P.P.** சௌத்ரி, கர்நாடக துணை முதலமைச்சர் திரு. **D.K.** சிவக்குமார், முன்னாள் முதலமைச்சர் திரு. வீரப்ப மொய்லி மற்றும் பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த மசோதா குறித்த தங்களது கருத்துக்களைத் தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

நாடாளுமன்றத்தால் கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ள இந்த மசோதா குறித்து, பல்வேறு மாநிலங்களுக்கு நேரில் சென்று ஆட்சேபனைகளும் பரிந்துரைகளும் சேகரிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கு சில மாநிலங்களின் சட்டப்பேரவைகளை முன்கூட்டியே கலைக்க வேண்டியிருக்கும் என்று அவர் கூறினார்.

கட்சித் தாவல் தடைச் சட்டம், நம்பிக்கையில்லா தீர்மானம் மற்றும் குடியரசுத் தலைவர் ஆட்சி ஆகியவற்றால் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அடிக்கடி தேர்தல்கள் நடத்தப்படுவது நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல என்றும் திரு. சௌத்ரி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மிகப்பெரிய கடனில் உள்ளது என்றும், அவற்றை சீரமைக்க வேண்டியது அவசியம் என்றும் மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2001ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 45 ஆயிரம் பேர் பணிபுரிந்த மின் துறையில் தற்போது அந்த எண்ணிக்கையில் பாதியளவு ஊழியர்கள்தான் பணிபுரிந்து வருவதாக கூறினார்.

மின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இதன்மூலம் வெளி

மாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்குவது கணிசமாக குறைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்பு தவெக அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தின் ஒவ்வொரு துறைகளும் ஆய்வு செய்யப்பட்டு வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்றும் திரு. நிர்மல் குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

அஇஅதிமுக சட்டமன்ற கட்சிக் கொறடா தொடர்பாக உரிய நேரத்தில் உரிய முடிவெடுக்கப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மற்றும் திரு. வேலுமணி ஆகியோர் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள மனுக்கள் ஆய்வில் உள்ளதாகத் தெரிவித்தார்.

முன்னதாக ஆயிரம்விளக்கு தொகுதியில் பொதுமக்களை சந்தித்துப் பேசிய சட்டப்பேரவைத் தலைவர், மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மாநில அரசு நிறைவேற்றும் என்று கூறினார்.

சென்னை மாநகரில் சில பகுதிகளில் நிலவும் கழிவுநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக திண்டுக்கல், தேனி, மதுரை, கோவை, நீலகிரி ஆகிய 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, அந்தமான் கடல் பகுதி, தெற்கு மற்றும் மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதியில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அந்தப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

லெபனான் எல்லைக்குள் செயல்படும் தீவிரவாத முகாம்கள் மீது நேற்று வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

------------

சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நடுவர் நீதிமன்றம் கடந்த 15ஆம் தேதி வழங்கிய தீர்ப்பை நிராகரிப்பதாக இந்தியா கூறியுள்ளது.

------------

எல்லைக்கு அப்பாலில் இருந்து இந்தியாவில் பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டினால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று இந்திய ராணுவம் எச்சரித்துள்ளது.

------------

புதிய விதிமுறைகளின்படி தலைநகர் தில்லியில் அடுத்த ஆண்டு முதல் மின்சார ஆட்டோக்கள் மட்டுமே இயங்க அனுமதிக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

------------

தில்லியில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக அம்மாநிலத்தைச் சேர்ந்த ஏராளமானோர் அண்டை மாநிலமான ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள சிம்லாவில் குவிந்து வருகின்றனர்.

------------

குருவாயூர் - எழும்பூர் இடையே இயக்கப்படும் விரைவு ரயில் இம்மாதம் 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை கோட்டயம் வழியாக இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

------------

சுற்றுலாத் தலமான உதகமண்டலத்திற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் செல்வதால் கோவையில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

------------

தமிழக அரசின் உத்தரவயைடுத்து, தூத்துக்குடி மாவட்டம் தெற்கு ஆத்தூரில் இருந்த மதுக்கடை நேற்று முதல் மூடப்பட்டது.

------------

கோவில்பட்டியில் நடைபெறும் புத்தகத் திருவிழாவை மாவட்ட ஆட்சியர் திரு. ஹிமான்ஷு மங்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

------------

திருநெல்வேலியில் போதைப்பொருள் தொடர்பாக இந்த ஆண்டு 103 வழக்குகளில் 131 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 29 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்தது.

248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 4 விக்கெட் இழப்புக்கு 218 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

தரம்சாலாவில் இன்று நடைபெற உள்ள போட்டியில் பஞ்சாப் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

தில்லியில் நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் தில்லி அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

----------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பெங்களூரு அணி 2-1 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் பஞ்சாப் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை தோற்கடித்தது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் காசி அணி - தில்லி அணியையும், இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் மோகன் பஹான் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியையும் எதிர்கொள்ள உள்ளன.

-------------

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, இன்று இந்தோனேஷியாவின் Leo Rolly - Daniel Martin இணையை எதிர்கொள்கிறது.

**பேங்காக்கில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இன்று காலை மணி 10.50க்கு தொடங்க உள்ளது.**

**<<<<The End>>>>**